# ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...

## பிரேஸ்லெட்



பூமாதேவி

ரொம்ப சுலபமாக செய்யக் கூடிய வகையில் இந்த வாரம் நாம பார்க்கப் போறது பெண்களுக்கு பிடிச்ச ஜூவல் மேக்கிங் பற்றிதான். இந்த வாரம் பிரேஸ் லெட் எப்படி செய்யறதுன்னு கத்துக் கொடுக்கப் போறாங்க பூமாதேவி.



**தேவையான பொருட்கள்:**

சதுர வடிவிலான மணிகள்: தேவைக்கு

பெரிய மணிகள் அல்லது கிரிஸ்டல்கள்: தேவைக்கு

சின்ன மணிகள்: தேவைக்கு

சில்வர் மணிகள்: தேவைக்கு

மெட்டல் மணிகள்: தேவைக்கு

கியர் ஒயர் : தேவைக்கு

கியர் லாக் :தேவைக்கு

பெரிய சக்ரி: தேவைக்கு

பெரிய சைஸ் ஹியர் ஹூக்: 2

கட்டர்: தேவைக்கு

பிளேயர்: தேவைக்கு



**செய்முறை:**

இப்போது நாம் செய்யப் போவது பிரேஸ் லெட் என்பதால் யாருக்காக செய்கிறோமோ அவர்களின் கை அளவை எடுத்துக் கொள்ளவும்.



பிறகு எடுத்துக் கொண்ட கை அளவிற்கு கியர் ஒயரை துண்டாக்கி அதன் ஒரு முனையை ஹியர் ஹூக்கில் நுழைத்து இரண்டு முனைகளையும் சேர்த்தாற்போல் கியர் லாக் கொண்டு பிளேயரால் இறுக் கவும். இப்போது கியர் லாக்கை ஒட்டினாற் போல் மூன்று சின்ன மணிகளை கோர்க் கவும். அதன்பிறகு ஒரு வெள்ளி மணி, பெரிய கிரிஸ்டல் மணி கோர்த்து, அதன் பிறகு பெரிய சக்ரி கோர்த்து சதுர மணியை கோர்க்கவும். இப்படி ஒரே வரிசையில் கோர்த்துக் கொண்டே வரவும்.



இறுதியாக முடிக்கும்போது முதலில் சொன்னது போல் இரண்டு பகுதிகளையும் சக்ரி கொண்டு இணைக்கவும். இப்போது அழகான பிரேஸ்லெட் தயார்.

### இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை:

★ எடுத்துக் கொண்ட கை அளவைவிட ஒரு இன்ச் கூடுதலாக கியர் ஒயரை துண்டாக்கவும். அப்போதுதான் மணிகள் கோர்த்த பிறகு அளவு சரியாக இருக்கும்.

★ இதில் பயன்படுத்தப்படும் மணிகள் அனைத்தும் கொஞ்சம் விலை அதிகமுடையது என்பதால் விசேஷங்களுக்கு போடலாம்.

★ இதில் பெரிய ஹியர் ஹூக்கிற்கு பதிலாக சின்ன ஹூக்கையும் இணைக்கலாம்.

★ இதையே மாடலாக கொண்டு கழுத்து மாலை, தோடு போன்றவற்றையும் செய்யலாம். மேட்சாக போடும்போது இன்னும் அழகாகயிருக்கும்.

★ இப்படி ஒரே பாணியில் செய்வதை விட வெவ்வேறு டிசைன், கலர் மணிகள் கோர்த்து செய்யும் போது பார்க்க இன்னும் அழகாக இருக்கும்.

-சங்கீதா...



